உ

ஓம் சிவாயநம:

மதுரை

ஸ்ரீ மீனாட்சியம்மையார்

தோத்திரப் பாமாலை



இயற்றியவர்:

மகா. சோமசுந்தர சுவாமிகள்,

கோவிலூர் மடம்,

காரைக்குடி.

1956.

உ

ஓம் சிவாயநம:

திருவாலவாய் என்னும்

மதுரையம்பதியின்கண்

எழுந்தருளி விளங்கும்

ஸ்ரீ மீனாட்சியம்மையார்

தோத்திரப் பாமாலை.

★

கோவிலூர் மடம்

மாணவர்

மகா. சோமசுந்தர சுவாமிகளால்

பாடப்பெற்றது.

★

திருவாரூர் - விஜயபுரம் கருணாநிதி அச்சகத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

1956.

ஓம் சிவாயநம:

முன்னுரை.

இந்நூல், திருவாலவாய் என்னும் மதுரையம்பதியில் எழுந்தருளி விளங்கும் ஜகதம்பிகையாகிய ஸ்ரீ மீனுட்சியம்மையார் பேரிற் பாடிய தோத்திரப் பாமாலையாகும். முப்பது செய்யுட்களால் யாக்கப்பெற்றது. முன்னோர் நூல்களாகிய சகலகலாவல்லி மாலை, சச்சிதானந்தமாலை, திருவேகம்பமாலை, சோணசைலமாலை களாகிய இவைகள், முறையே பத்து, முப்பது, நாற்பது, நூறு செய்யுட்களால் யாக்கப் பெற்றிருக்கின்றன. இவ்விதம் பலவாருக இலக்கியங்கள் காணப்படுவதால், முப்பது செய்யுட்களைக் கொண்ட இந்நூலுக்கும் மாலை என்ற பெயர் சூட்டப்பெற்றது. மாலை யென்பதற்குப் பல பொருள்களிருப்பினும், இங்கு சொல்லாற்ரெடுத்த தொடையே பொருளாகும்.

இதைப் பாடி முடித்த பின் ஆண்டுகள் சில கழிந்தன. அச்சிட்டுப் பார்ப்பது எப்பொழுதோ என்று நினைத்துக் கொண் டிருந்தேன். அப்படியிருக்கும்பொழுது **அச்சிட்டுத்தரும் பொறுப்பினை,**

உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
யிடுக்கண் களைவதாம் நட்பு — என்னுந் தமிழ் மறைக் கிலக்கியமாய்ப் பன்னுட்பழகிய நண்பரும், உழுவலன்புடையாரும், சங்கமங்கலம் நடராஜ ஐயர் அவர்கள் ஜேஷ்ட புத்திரரும் ஆகிய (சீர்காழி தாடாளன் கோவில் சந்நிதித்தெரு) பிரம்மஸ்ரீ **S. N. வெங்கட்டராம ஐயர்** அவர்களும்,

ஷை யார் மைத்துனரும், சாத்வீக குணத்துக்கொரு கொள்கலமாய் விளங்குபவரும், ராமநாத ஐயர் அவர்கள் குமாரரும் ஆகிய (ஷை தாடாளன் சந்நிதித்தெரு) பிரம்மஸ்ரீ **R. சுப்பிரமணிய ஐயர்** அவர்களும்,

14-2

இவ்விருவர்களின் நண்பரும், முன்பின் அறியாதாரிடத்தும் முகமலர்ந்து பேசும் இன்சொல்லுடையாரும், கொல்லம் (அரிசி வியாபாரம்) T. V. கிருஷ்ண ஐயர் அவர்கள் குமாரரும் ஆகிய பிரம்மஸ்ரீ **T. K. வெங்கடேஸ்வர ஐயர்** அவர்களும்,

இம் மூவர்கட்கும் நண்பரும், சீர்காழி பிடாரிகோவில் தெற்குவீதி திருஞானசம்பந்தம் பிள்ளை அவர்கள் குமாரரும், "தந்தை அறிவு மகனறிவு" என்னும் முதுமொழிக் கேற்ப நல்லறிவு வாய்க்கப் பெற்றவரும் ஆகிய உயர்திருவாளர் **T. சாமிநாத பிள்ளை** அவர்களும் ஆக நால்வர்களும் ஏற்றுக் கொண்டார்கள். இந் நால்வரது நன்றிகளையும் என்றென்றும் மறவேன்.

இப் புத்தகத்தை அழகிய முறையில் அச்சிட்டுக் கொடுத்த, திருவாரூர்–விஜயபுரம் கருணாநிதி அச்சகத்தாருக்கு எனது நன்றி.

"இருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி" எனப் புகழப் பெற்ற, தொன்றுதொட்டு வருந் தூய பழங்குடிகளிற் பிறந்த அறிஞர் பெருமக்களாகிய இவர்கள் அனைவர்கட்கும் அஷ்டைஸ்வரியமும், ஆரோக்கிய திடகாத்திரமும், சிந்தித மனோரத சித்தியும், சிவஞானச்செல்வமும் மேன்மேலும் விருத்தியடைய வேண்டுமென ஸ்ரீ மீனாட்சியம்மையாரின் திருவடிகளைப் பிரார்த்திக்கிறேன்.

கோவிலூர் மடம்,
14—10—56.

இங்ஙனம்,
மகா. சோமசுந்தரம்.

☆

உ

திருவையாறு அறுபத்துமூவர் மடம்

பண்டித சித. **சங்கத்து நாராயணசாமி** அவர்கள் இயற்றிய

சாத்துக்கவி.

அறுசீரடி யாசிரியவிருத்தம்.

முத்தமிழ் மதுரை தன்னின் முறைபுரிந் தரசு செய்யும்
வித்தகி மீனக் கண்ணி மிளிர்பதக் கணிசெய் பாவாற்
புத்தமிழ் தொழுகு மாலை புனைந்தனன் கோயி லூர்வாழ்
நத்துற வரனுஞ் சோம சுந்தர நாவ லோனே.

பத்தியின் சுவைகொண் டோங்கப் பழந்தமிழ் வரலா றோடு
தித்திக்கு மொழியின் கூட்டந் திரண்டெளி தின்ப மூட்ட
ஒத்துநின் றொழுகு மிந்த வுவமமில் மாலை கேட்டால்
புத்தியை யெவரு மன்னை புகழினிற் புகுப்பர் நன்றே

☆

வேம்பத்தூர் வித்வான்
சிலேடைப்புலி பிச்சுவையர் அவர்கள் குமாரரும்,
மதுரைக் கல்லூரி உயர்நிலைப்பள்ளி
ஓய்வுபெற்ற தமிழ்ப் பண்டிதருமாகிய

பிரம்மஸ்ரீ **பாஸ்கர ஐயர்** அவர்கள் இயற்றிய

சாத்துக்கவி.

நேரிசை வெண்பா.

சங்கப் புலவர்மெச்சத் தண்டமிழ்ப்பா மாலைசொற்றான்
சங்கக் குழைக்காதார் சங்கரன்றன் — பங்கிலுறை
காவ லரசங் கயற்கண்ணி பூந்தாட்கு
நாவலவன் சோமசுந்த ரம்.

14-2

உ

ஓம் சிவாயநம:

திருவாலவாய் என்னும்

மதுரையம்பதியின்கண்

எழுந்தருளி விளங்கும்

ஸ்ரீ மீனாட்சியம்மையார்

தோத்திரப் பாமாலை.

★

ஸ்ரீ விநாயகர் காப்பு.

கட்டளைக்கலித்துறை.

பூவார்ந்த சோலை மதுரைமீ னாட்சிதன் பொற்புகழ்சேர்
பாவார்ந்த மாலை யகவல் விருத்தம் பகருதற்கு
நாவார்ந்த சொல்லும் பொருளுநன் றாக நமக்கருளுஞ்
சேவார்ந்த சங்கரன் றந்தரு ளைங்கரச் சிந்துரமே.

☆

ஸ்ரீ சரஸ்வதி காப்பு.

கட்டளைக்கலிப்பா.

பால வான்மதி சூடிய பண்ணவன்
பாகம் வந்த பராபரை பார்வதி
ஆல வாய்வள ரங்கயற் கண்ணியாம்
அம்பி கைதுதி யாரம தோதிடக்
கோல வாரிசங் கோமள வீடதாக்
கொண்ட பாரதி தண்டமி ழாகரி
யேல வார்குழ லின்னிசை நங்கையெற்
கினிய சொற்பொரு ளீந்தருள் செய்வளே.

அவையடக்கம்.

★

பன்னிருசீர் ஆசிரியவிருத்தம்.

முத்தமிழ்ப் பாண்டிமது ராபுரிச் சங்கத்துண்
  முனமிருந் தருளிறையனுர்
முதலாக வரசஞ்சண் முகனுர்தம் மீருக
  முதுபெரும் புலவரெல்லாந்
தத்தமக் குளபுலமை மேதைகொடு நூல்செய்த
  தமிழகத் தொன்றுமறியாத்
தமியேனு மதுசெய்வ தென்னிலோ வான்றவர்கை
  தட்டிச் சிரிப்பராமால்
எத்துணைப் பிழைகள்கா ணப்படினு மவையாவு
  மென்னதறி யாமையென்றும்
எங்கேனுமினியசொற்பொருள்காணினவையெலா
  மிறைவியரு ளென்றுமெண்ணிச்
சுத்தநற் பரிமளப் பூவினெடு நாரையுஞ்
  சூடிமகிழ் வார்களேபோற்
சொற்பொருட்குற்றம்பொறுத்தெனதுகவிகளுஞ்
  சொல்லிமகிழ் வாரறிஞரே.

☆

நூல்.

நீர்பூத்த கமலம்வளர் கலைவாணி வீணைவிரல்
நீவியின் னிசைமிழற்ற
நீடலை முழங்குதண் பாற்கட லுதித்தமக
ணிலவிடுங் கவரிவீசக்
கார்பூத்த மேனிவிண் வேந்துமனை யிந்த்ராணி
களிகொண் டடைப்பையேந்தக்
கவினிரதி படியகந் தாங்கிடப் பெண்குழூஉக்
கடவுளர்கள் வாழ்த்தெடுப்ப
ஏர்பூத்த பவளமலை யொருபாங்கின் மரகத
விளங்கொடி படர்ந்ததென்ன
விறைசோம சுந்தர ருடன்சிங்க மெல்லணை
யிருந்துலகை யாளுமரசி
சீர்பூத்த வைகைசூழ் பாண்டிவள மண்டலந்
திகழவரு தெய்வமின்னே
தென்மதுரை வாழ்பெரிய சின்மய சொரூபபர
தேவிமீ னாட்சியுமையே. 1

கோப்பெருந் தேவிகாஞ் சனமாலை கையினூற்
குளிர்கொண்டல் போனிறத்த
கூந்தலிற் றிருவினெடு பிறையணிந் திளமதிக்
குளமிசைப் பொட்டணிந்து
பூப்பெருங் குவளைவிழி யஞ்சன மணிந்துசெவி
பொற்புறக் கொப்பணிந்தம்
போருகக் கரமீது பொற்றொடி யணிந்திடைப்
பொலிவுறாஉம் பட்டணிந்து
நாப்பெரும் புகழுக் கடங்காத வடிகண்மிசை
நன்கல மெலாமணிந்து
நவமணித் தொட்டிலிட் டினிதுதா லாட்டமகிழ்
நகுவிதுக் குலவிளக்கே
சேப்பெருந் திருவூர்தி யெம்பிரான் பிரியாத
தெய்வீக வாரணங்கே

தென்மதுரை வாழ்பெரிய சின்மய சொரூபபர
தேவிமீ னாட்சியுமையே. 2

அந்தரி சவுந்தரி சுதந்தரி பவானிபர
மானந்த வல்லிவாலை
யாயிசிவை குண்டலினி யோங்காரி யம்பிகை
யனந்தமய செககாரணி
சுந்தரி கபாலிதிரி புரைவாமி சிவகாமி
சுருதிசொலு மபிராமியே
சுகவடிவ முத்தியரு ளென்றுதொழு மன்பரைத்
தொண்டனேன் றுதிபுரிவனே
முந்தரி தனக்குமவ னுந்தியய னுக்குமடி
முடியறிய வரியபொருளாம்
முழுமுதலை யேதனது கொழுநனென் றிதயமகிழ்
மூன்றுகண் ணுடைய பொன்னே
செந்திரவி யக்குன்ற மென்னநெற் போர்கள்புரி
தென்பாண்டி நாட்டரசியே
தென்மதுரை வாழ்பெரிய சின்மய சொரூபபர
தேவிமீ னாட்சியுமையே. 3

சொற்பொருளமைந்தமுதுநால்வர்தமிழ்வாய்கொண்டு
தோத்திரம் பாடியறியேன்
தூயவுள னெகிழ்ந்து தாயிரம் பேர்சொலித்
தோட்டுமலர் தூவியறியேன்
முற்பொருள தாமுன்னை யுள்ளபடி யுணர்கின்ற
மோனயோ கம்புரிகிலேன்
மூள்பிறவி யேழ்கடலை யெந்தவித நீந்துவேன்
முத்திதரு நீயிருக்கப்
பொற்பொரு ளிருக்குநிலை மீதிருந் தறியாது
பொங்கியழு மிடியரைப்போற்
போக்கினேன் வாணாளை யினியேனு மன்னைநின்
பூவடிகள் சாரவருள்வாய்

சிற்பொரு ளெனச்சுருதி செப்பியொளிர் தீபமே
தென்னவர் குலக்கொழுந்தே
தென்மதுரை வாழ்பெரிய சின்மய சொரூபபர
தேவிமீ னாட்சியுமையே. 4

பிள்ளையின துள்ளம்வெகு பேதைமைய தாதலாற்
பிழைபுரித லுலகவியல்பே
பெற்றவள் பொறுதுகரம் விட்டுவிட் டாலது
பிழைப்பதெவ் வாறதைப்போல்
உள்ளபடி சொல்லுவே னிதுவரையு முன்னையா
னுள்கவிலே யெனதுகுறைதான்
உயிர்களெல் லாம்பெற்ற கருணைவடி வன்னைநீ
யுவகைசெய் தாளவேண்டும்
வள்ளமிசை ஞானவமு தந்தந்து கவுணியர்கண்
மரபில்வரு சிறுகுழந்தை
வாய்நின்று மின்கவிதை பொழிவித்து வாழ்வருளும்
வண்ணமர கதவல்லியே
தெள்ளமுத மாகிவரு வைகைநதி நீர்பாய்ந்து
செந்நெல்விளை பாண்டியரசி
தென்மதுரை வாழ்பெரிய சின்மய சொரூபபர
தேவிமீ னாட்சியுமையே. 5

பலகோடி பிறவியி லுழன்றுழன் றிந்நாட்
பரிபாக லேசவசமாய்ப்
பரகதி பெறற்குரிய மனிதவடி வாகியும்
பாழ்மனது போகும்வழிபோய்
உலகோடு மருவிவரு துக்கபர னாகியே
யுனையான் மறந்துவிடிலோ
வுண்மைபெற லெந்தவிதம் ஓம்நமசி வாயையென்
றுருகவைத் தருள்பொழிகுவாய்
தலகோடி யுண்டசெந் திருவாய் மலர்ந்துமுன்
றனுவிசயன் மயலொழித்தே

சமர்மூட்டி யொருதினந் தபனனை மறைத்திட்ட
சக்கரப் புயல்தங்கையே
சிலகோடி யன்றியே வெகுகோடி புகழ்பெருகு
செஞ்செழியர் நாட்டரசியே
தென்மதுரை வாழ்பெரிய சின்மய சொரூபபர
தேவிமீ னுட்சியுமையே. 6

கொம்புவிட் டொருகொம்பு பாயுங் குரங்குபோற்
குவலயத் தெங்குமுழலுங்
கோபலோ பாதியுரு வாய்வந்து சமமாதி
கூடாம லாறலைக்கும்
வம்புவிட் டவிழுமல ரணியளக மின்னார்
மயக்கூட்டி யறிவழிக்கும்
வாராத பொருள்வேண்டி மன்ருடு மிந்தமன
மாயையற மந்த்ரமிலையோ
அம்புவிட் டகலாத சிலைநுதற் கண்ணியே
யகம்விட்ட அறிஞரமுதே
யணைவிட்ட கடலுலகில் வாதிட்டு மதமெலா
மளவிடாப் பெரியபொருளே
செம்புவிட் டளவாத கனகமே வரையில்வேல்
செலவிட்ட சேயன்னையே
தென்மதுரை வாழ்பெரிய சின்மய சொரூபபர
தேவிமீ னுட்சியுமையே. 7

சங்குஞ் சுடர்த்தரள மணியுமெறி யாழிசூழ்
தரணியின் ருேற்றமுழுதுந்
தறிதோன்று புருடனுங் கானல்வரு நீரமுந்
தாம்பிடை விளங்குமரவும்
பொங்குங் கதிர்த்தவள விப்பியொளிர் வெண்பொனும்
போலவே பொய்யாமெனும்
போதமின் றித்திரியு மெளியனேன் பூரணப்
பொருளுன்னை யுணர்வதென்ருே

கொங்குங் கொழுந்தளமு மதுவுமுறு மணமலர்க்
குந்தளத் தோகைமயிலே
கோமகளிர் மேனியும் பொன்மாலை யுங்கரங்
கொண்டுதா லாட்டுகுயிலே
செங்குங்கு மத்திலக வதனியே சிவபிரான்
றிருவுள்ள மருவன்னமே
தென்மதுரை வாழ்பெரிய சின்மய சொரூபபர
தேவிமீ னாட்சியுமையே. 8

பிங்கலை யிடாவெனு மிரண்டுவழி மாருதம்
பிழைபடா தொருமையுறவே
பேசரிய வோரிதழ்த் தாமரையை மேனிறீஇப்
பிரணவ நினைந்துவிரவி
மங்களம தானசிறு சுழிமுனை புகுத்தியே
மனதுவச மாகிவரவும்
வாராத காட்சிகளும் வந்தொளிர வுங்கருணை
மழைபொழிய வேண்டுமம்மே
அங்களப குங்குமக் கொங்கையயி ராணியுட
னுழிபெறு சீதேவியும்
அள்ளலிற் பிறவாத நளினவிறை நாமகளு
மடிபணிந் தேத்துமமுதே
திங்களணி மாடமிசை யாடுகொடி யடியார்கள்
தெரிசிக்க வரவழைக்குந்
தென்மதுரை வாழ்பெரிய சின்மய சொரூபபர
தேவிமீ னாட்சியுமையே. 9

பூவாரு நல்லபொற் றாமரை படிந்துமெய்
பொலியவெண் ணீறுபூசிப்
புங்கமிகு கண்மணிக் கண்டிகை புனைந்துனது
புனிதசந் நிதியடைந்து
நாவார வைந்தெழுத் தோதிவிழி நீர்மரும
நனையப் பொழிந்துநின்றுன்

ருண்மலர்த் திருவடிக் காளாகு நாளெந்த
நாளந்த நாளருளுவாய்
மாவார ணங்கடைய வந்தவிட முண்டபரன்
மரியா திருக்கவென்றும்
மங்காத மங்கலத் திருநாண் கிடந்தொளிரும்
வளவிய கிரீவமங்காய்
தேவார மும்புகழ்த் திருவாச காதியுஞ்
செவியமுத மாய்நிரப்புந்
தென்மதுரை வாழ்பெரிய சின்மய சொருபபர
தேவிமீ னுட்சியுமையே. 10

தருவா யிருந்துபொன் னுலகாளு மிந்த்ராதி
தம்பதமு மித்தையெனவே
தள்ளியொரு நிலைபெறற் கியமநிய மாதிநூல்
சாற்றுத லறிந்துமென்ன
வொருவாய்மையேனுமென்மனதிலிலைபொறுமையோ
வோரெள்ளி னளவுமில்லை
யுறுகோப மாறவிலை சிறிதேனு மாசையோ
வோயவிலை யாதுபுரிவேன்
குருவா யெழுந்தருளி நின்கொழுநன் வந்தடிமை
கொள்வனே லுய்திபெறுவேன்
குரைகட லுடுத்துவளர் தரைவள ருயிர்க்கெலாங்
குளிர்கருணை யன்னைநீயே
திருவாய் மலர்ந்தருளி யெனதுபவ நீங்கவே
செயவேண்டு ஞானவரசி
தென்மதுரை வாழ்பெரிய சின்மய சொருபபர
தேவிமீ னுட்சியுமையே. 11

இந்தனமு நவமணியும் வரிவளையும் விற்றுவர
வெழின்மாட வீதிபுகுநாள்
எந்தைதிரு வடிமலர்க ளென்சிர முறும்படியொ
ரெளியபுல் கல்லாகவோ

வந்ததனி லேகிடந் துயர்வாழ்வு பெற்றிலேன்
மலைமகா ணீயேனுமோர்
வழியாக வுதவிசெய் தாயுமிலை யினியேனும்
வான்கருணை பொழிதியம்மே
சந்தன மரஞ்செறியு மலயமுனி யைக்கொண்டு
சங்கநக் கீர னுக்குத்
தண்டமி ழுணர்த்தியொளிர் பொற்கிழி யளித்துநற்
றருமியைக் காத்தபரனைச்
செந்தன மகாசலம் வளைத்தசிவ நம்பனைச்
செம்பாதி பெற்றவடிவே
தென்மதுரை வாழ்பெரிய சின்மய சொரூபபர
தேவிமீ னாட்சியுமையே. 12

பவராசி யானவெழு சலராசி தாண்டியே
பரமான கரைசாரவுன்
பதவாரி சப்புணைக டுணையாக நம்பினேன்
பரமனையு முனையுமல்லால்
எவராவ திப்பெரிய வுவராழி சூழ்புவியி
லீடேற்ற வல்லருளரோ
விந்தவுட லழியுமுன மெந்தவித மாவேனு
மென்னையாண் டருள்புரிகுவாய்
தவராச னனவொரு கவிராச பண்டிதன்
றன்சுதை யெனக்காசிபோய்த்
தனவணிக ராவணங் கண்டமணி சேர்பொனூற்
சமைகடக மணிகரத்தாய்
சிவராச தானியென மகிழ்வோடு மக்களுந்
தேவர்களும் வந்துபணியுந்
தென்மதுரை வாழ்பெரிய சின்மய சொரூபபர
தேவிமீ னாட்சியுமையே. 13

கமரினிடை நழுவிவீழ் தயிலமென வும்புழுதி
களில்வீழு மிரதமெனவுங்

கடுகளவு பயனிலா தைந்துவழி யோடுமுட்
கரணமொரு நிலைபெருதே
தமரமக ராலயத் தெழுதிரைகள் போலவரு
சங்கற்ப சாலமெல்லாந்
தழலுண்ட பளிதமாய் நினதருள் விழுங்கிடச்
சமரசம் பெறுவதெந்நாள்
குமரகுரு பரமுனி மொழிக்குமொழி மதுரிதங்
குலவுபிள் ளைத்தமிழ்சொலிக்
குழுவரங் கேற்றமைய மருகிருந் தேற்றதிற்
கூறும்வா ரானையொன்பான்
றிமிரமறு கவிசொலத் திருமலை நராதிபன்
றிகழ்மணி கழற்றியிட்டோய்
தென்மதுரை வாழ்பெரிய சின்மய சொரூபபர
தேவிமீ னுட்சியுமையே. 14

நெஞ்சா லியன்றவண மிடர்செய நினைந்தமணர்
நீற்றறை விடப்பிழைத்து
நெடியகற் றூணிற் பிணித்தலை முழங்கியெறி
நீராழி யிடவெழுத்தோ
ரஞ்சா லியன்றபதி கஞ்சாற்றி யேகெடில
வதிகையம் பதியடைந்தோன்
அன்பான் "முளைத்தானை" யென்றெடுத் துத்தமி
ழுருங்கவிகள் பாடமுன்னுண்
மஞ்சா லியன்றமழை பொழிவதென வருள்பொழியும்
வள்ளற்கு வாய்த்தமின்னே
மன்னன்மல யத்துவச வழுதிமக ளாய்வந்து
மகுடமுடி யேற்றபொன்னே
செஞ்சாலி யுங்கழையும் வாழையொடு பூகமுந்
தெங்குமெவை யுஞ்செழிக்குந்
தென்மதுரை வாழ்பெரிய சின்மய சொரூபபர
தேவிமீ னுட்சியுமையே, 15

முந்துரவி குலராமன் மோனமுற முனியொருவன்
மொழியுநூன் முதலவெல்லாம்
முதுநாம ரூபப்ர பஞ்சங்கண் முழுதுக்கு
முற்றமித் யாரோபமே
தந்துரம தாய்நின்று சாதிக்க வென்மனஞ்
சத்திய மெனக்கருதியே
சஞ்சலப் படுதலான் மாற்றியமு தம்பெறத்
தண்ணருளே வேண்டுகின்றேன்
இந்துரவி மண்டல மிழிந்தெனச் சுடர்வீசு
மிந்திர விமானவணையில்
எங்களிறை வன்சோம சுந்தர னுடன்றங்கி
யிலகுகோ மளவல்லியே
சிந்துர விளம்பிடிய தாயிந்து ளாடவி
செறிந்துவள ராரணங்கே
தென்மதுரை வாழ்பெரிய சின்மய சொரூபபர
தேவிமீ னாட்சியுமையே. 16

இம்மணி லுதித்துநர வடிவாகி வந்தவரி
லென்போல வொருவருளரோ
விரவிமதி வாயுவைச் சுழிமுனை புகுத்துமுறை
யெளிதுகுரு நாதனருளாற்
கைம்மணி நிகர்ப்பவுப தேசித்து மதனையான்
கைக்கொண்டு தேறிடாமற்
காலங் கடத்தினே னம்மா பிராரப்த
கருமத்தை யென்சொல்லுவேன்
மும்மணி யெனக்குலவு பெண்மணிக ளேதனது
முக்கண்மணி யானமணியே
முழுமணிச் சுட்டியொளிர் நுதலிடை யிளந்திங்கண்
முன்பக்க மாணிக்கமாஞ்
செம்மணி யிழைத்தெனச் சிந்தூர திலதமணி
செந்தமிழ்ப் பாண்டிமணியே

தென்மதுரை வாழ்பெரிய சின்மய சொரூபபர
தேவிமீ னாட்சியுமையே. 17

குன்றுகளோ ரெட்டுமெழு தீவுகளும் வேலைசூழ்
குவலயமொ ரேழிரண்டுங்
கொடுமுடிக ளாயிரத் தெட்டுடைய மேருவுங்
குரவைக ளமிழ்த்தவருநாள்
அன்றுமழி யாதபடி யென்றென்றும் வாழ்வடையு
மன்னைநீ யாயிருக்க
ஆயிலாச் சேய்போல நோதலழ கல்லவெனை
யாண்டருள் வழங்கிடம்மா
மன்றுணட மிட்டெட்டி லொன்றுகுறை வாரிகளும்
வைகையு மழைத்துமகனு
வந்தவழு திக்குநகு வளைசெண்டு வேலுதவு
மாதகை மணந்தகொடியே
சென்றுகளி வண்டினந் தேனுண்ட பரிமளச்
செங்கமல வாவிபுடைசூழ்
தென்மதுரை வாழ்பெரிய சின்மய சொரூபபர
தேவிமீ னாட்சியுமையே. 18

கொஞ்சுமா ரமுதமொழி நஞ்சுநேர் கரியவிழி
கொந்துசேர் தகரவளகங்
கொண்டவான் மதிவதனி வண்டுலாங் கடிகொள்பூங்
கொம்பனாள் பரவைமனைவாய்
அஞ்சுமா நடுநசியி லன்பொடா ரூர்மறுகின்
அன்றுபோய் நின்றபெருமான்
அஞ்சரோ ருகசரணம் வஞ்சனேன் முடிபுனைய
அம்பிகா அருள்பொழிவையோ
மஞ்சுமா கம்பரவி வந்துதவ முஞ்சக்ர
வாளமென வானளாவி
வண்பதா கைக்குழா நின்றுடு சிகரமுறு
மதில்சூழு மகழியின்கட்

சிஞ்சுமா ரங்கிடந் தமரவரு பகைஞரைச்
செஞ்செவே வெருவுறுத்துந்
தென்மதுரை வாழ்பெரிய சின்மய சொரூபபர
தேவிமீ னுட்சியுமையே. 19

மாறுது நினதருட் கடலிடை யழுந்தியுன்
மத்தனென வேயிருந்த
மறையவ னமாவாசை யன்றுபூ ரணையென்ற
வாக்கைமெய் யாக்குவிக்க
வீறுக விண்ணினிடை யம்புலி யெனக்கங்குல்
விடியும்வரை நிலவுவிரிய
மிளிர்தோடு வீசியிடு மபிராமி யுன்கருணை
விளையாட லென்னேயென்னே
நீறுக முப்புர மெரித்ததழ னகையானை
நீள்கங்கை யுச்சியானை
நீபவண் காட்டானை வெள்ளானை யின்சாப
நீக்கிவழி காட்டினுனைத்
தேருத மறைகளுக் கெட்டானை ரவிமுதற்
றிகழெட்டி னுனைவேட்ட
தென்மதுரை வாழ்பெரிய சின்மய சொரூபபர
தேவிமீ னுட்சியுமையே. 20

உற்கையி னெளிக்குமுகி லூடொளிரு மின்னற்கு
மோங்குமெழு நாவழற்கு
மொண்குமுத மலரவரு தண்கலை மதிக்குமின
னேராயி ரங்கதிர்க்கும்
நெற்கிடையு மெட்டுணையு நீங்காத வஞ்ஞான
நீடிமிர மோடியொழிய
நின்கருணை யானந்த மெய்ஞ்ஞான பானுவென்
னெஞ்சக முதிக்கவேண்டுங்
கொற்கையி னிருந்தரசு புரிசெழியர் தங்குலங்
கொண்டாட வந்தகொடியே

குலசேக ரக்குரிசில் பெற்றமல யத்துவச
கோமகன் கொஞ்சுமகவே
தெற்கினுள குமரிவட வேங்கட மிரண்டிடைத்
தீந்தமிழ் வளர்த்தசிவையே
தென்மதுரை வாழ்பெரிய சின்மய சொருபபர
தேவிமீ னாட்சியுமையே. 21

மொய்த்தகதி ரோன்வீசு வெய்யின்மழை வாடைபனி
முற்றுஞ் சகித்தவணமாய்
மூடுமொரு போர்வைகுடை பாதுகை முதற்கொளா
முழுவிரா கம்படைத்த
மெய்த்தவர்கள் வாழ்ந்துவரு மித்தரையி லெனையுநிரு
மித்துவிட் டாயம்மையே
மேதக்க சாதன நிரம்பியுன் பூஞ்சரண
வீடுபெற் றுய்குவேனே
நெய்த்தசுரி பூங்குழற் கடைசியரு முழவரு
நெடுங்கள நிறைத்தபோரில்
நிகர்நாவ லோவெனு முழக்கமெண் டிசைபரவு
நீண்மருத வளமோங்குநன்
செய்த்தடம் விளைந்தநெற் கதிர்வளைந் தடியின்மலர்
சேயிதழ்க் கமலமருவுந்
தென்மதுரை வாழ்பெரிய சின்மய சொருபபர
தேவிமீ னாட்சியுமையே. 22

சிலங் கடந்தகுழ விப்பருவ நீங்கியது
சிறுகுமா ரம்போயது
திகழெவ்வ னத்தகைமை யுங்கடந் தேகியது
செறிமுதுமை வந்ததிப்பாற்
காலங் கடத்தினே னிதுவரையும் வீணிலே
காலனுக் கேதுமொழிவேன்
கவலா திருந்துநின் றிருவடிப் பேறுறாஉங்
கருணையமு தம்பொழிகுவாய்

நீலங் கடிக்கமல மாவசோ கந்தளவு
நிகழைந்து பகழியுடனே
நெடியசெந் தீங்கழைக் கோதண்ட முங்கொண்ட
நிமலையே யிமயமயிலே
சேலங்கண் மூன்றுடைத் திருமுக விலாசியே
செழுநீப வனவாசியே
தென்மதுரை வாழ்பெரிய சின்மய சொரூபபர
தேவிமீ னுட்சியுமையே. 23

வானூறு மகபதியை முன்னிட்ட விண்ணவர்தம்
வண்பத மெலாமிகழ்ந்து
மறைமுடிக ளோலமிடு முனதுபத வாழ்க்கையே
வாஞ்சைசெய் தெதிரில்நின்றே
யானூறு தரமோதி னுலுநின் செவிசாய்த்து
யாதுகரு தியதென்கிலாய்
யாக்கையழி யாமுன்ன நீக்கரிய விப்பிறவி
யாதனையை நீக்கியருள்வாய்
நானூறு காரிகை யகப்பொருட் கோவைநூல்
நல்வாத வூரன்மொழிய
நன்கனம் வரைந்திறுதி கையெழுத் திட்டவிறை
நாடக மகிழ்ந்தநங்காய்
தேனூறு பரிமளச் செக்கரிதழ் முளரிமேற்
சிறையனந் துயில்தடஞ்சூழ்
தென்மதுரை வாழ்பெரிய சின்மய சொரூபபர
தேவிமீ னுட்சியுமையே. 24

ஏட்டுக் கடங்காத கவலையெல் லாமுனக்
கெத்தனை யெடுத்துரைப்பேன்
எங்குநிறை வடிவினெடு முற்றறிவு முடையபெரு
மிறைவிநீ யென்னிடத்தே
கேட்டுத் தெரிந்தாக வேண்டுமென் றில்லையே
கேளாது தெரிவையன்றே

இட்டரிய விம்மனித வுடல்பிரிந் திடுமுனங்
கேடிலா வீடருளுவாய்
பாட்டுக் கிசைந்தபடி யாழிசைக் கும்பாண
பத்திரன் றன்பொருட்டுப்
பனைமடற் சேரலன் பார்க்க'மதி மலி'யெனும்
பாவெழுது வோன்றுணைவியே
சேட்டுக் குலைத்தெங்கின் முப்புடைப் பழம்வீழ்ந்து
தீம்பலாக் கனியுடைக்குந்
தென்மதுரை வாழ்பெரிய சின்மய சொரூபபர
தேவிமீ னாட்சியுமையே. 25

கூம்பலின் றிச்சுருதி முடிமலர்ந் தருண்மதுக்
கொப்பளித் துலவியோடிக்
குவலயமு மண்டபகி ரண்டமு நிரம்புநின்
கோமளத் தாண்மரைகளைச்
சோம்பலின் றித்தினமு முள்கியுள் கிப்பரம
சுகவாழ்வு பெற்றுமகிழ்வாத்
துன்பவெங் கல்லோலம் வீசுபிற விக்கடற்
சுழலா திருப்பதென்றோ
ஆம்பலின் குழலூதி யானிரை யழைத்தாய
ரகவுறியின் வெண்ணைதிருடி
யண்டரிய காளிந்தி மடுவினிற் காளிங்க
னவிருமணி முடியிலாடித்
தேம்பலின் றிப்பெரிய பாரத நடத்திடுஞ்
சீமூத மேனிதங்காய்
தென்மதுரை வாழ்பெரிய சின்மய சொரூபபர
தேவிமீ னாட்சியுமையே. 26

கூறுதுறை வழுவாது துறவுகூ றும்புகார்க்
கோமகனை முன்னிட்டபேர்
குவலயத் தவதரித் தின்பநிலை கூடவுங்
கொஞ்சமும் விராகமின்றி

யேறுதுறை தெரியாது வாணுள் கழித்துவரு
மெனையும் படைத்துவிட்டா
யித்தகைய கருமபரி பாகத்தை மொழிவதென்
னினியாவ தருள்செயம்மா
நூறுதுறை கொண்டொளி ரகப்பொருட் கல்லாட
நூறகவல் யாப்பினுக்கும்
நூறுதர முந்துளக் குஞ்சிரத் தேபத்து
நூறுமுக நதியுளானைத்
தேறுதுறை 'அன்பினைந் திணை'யென் றெடுத்தகச்
செய்யுள்செய் தானைமருவுந்
தென்மதுரை வாழ்பெரிய சின்மய சொரூபபர
தேவிமீ னாட்சியுமையே. 27

இழியருவி யென்னவும் பொழியுமழை போலவும்
மிருவிழியு நீர்சிந்தியே
யினியதிரு வருளுக் குரித்தான தாயுமா
னேசர்வட லூராளிபோல்
வழியவழி யச்சொரிந் திருகண்க ணின்றுதக
மார்புநனை வாகியோட
வந்ததிலை யொருகணமு மெனதுமன வன்கலோ
வயிரமர மோவிரும்போ
பழியினை யொழித்திந்தி ரற்கருளன் முதலவறு
பத்துநா லாடல்புரியும்
பரமபதி யென்றகற் பகதருவி னைச்சார்ந்த
பசியகா மருவல்லியே
செழியன்மக ளாய்வந்து கலைபயின் றுலகுமுறை
செய்தடா தகையரசியே
தென்மதுரை வாழ்பெரிய சின்மய சொரூபபர
தேவிமீ னாட்சியுமையே. 28

எந்தா யுனக்கியா னியம்புமித் துதிகவிக
ளினியபத் துப்பாட்டல

எட்டுத் தொகைச்செய்யு ளல்லபதி னெண்கணக்
கெண்ணிக்கை கொண்டதல்ல
பந்தாட விக்குணின் றுழலாது திருவருட்
பற்றினுன் முத்தியெய்தும்
படியெண்ணி யெண்ணியறி யாமையாற் பாடுமுப்
பதுபாட லாகுமம்மே
மந்தானி லம்பரவு பாண்டியரண் மனையுள்வாழ்
மணிமேக லாபரணியே
மாமணிப் பரன்முழங் குஞ்சிலப் பதிகார
வாஞெலிப் பூஞ்சரணியே
சிந்தா மணிப்பொருளு மைந்தருவு முதலியன
திசைவென்றி செய்துகொணருந்
தென்மதுரை வாழ்பெரிய சின்மய சொரூபபர
தேவிமீ ஞட்சியுமையே 29

மருவாழ்வு கொண்டமலர் போன்றநின் பொன்னடிகள்
வாழ்த்திவரு மன்பரெல்லாம்
மங்காத செல்வமுந் தானியமு மானமுது
மகவாதி யுந்திகழவே
பெருவாழ்வு கொண்டுடல நோயின்றி யின்பராய்ப்
பெட்புறுங் கல்வியறிவும்
பேரழகு நெடிதான வாயுளும் புகழ்களும்
பெரியர்நண் பும்பெருகிடத்
தருவாழ்வு கொண்டவன் வியந்திடக் குருலிங்க
சங்கமத் தன்புடையராய்த்
தவயோக ராசராய்ச் சிவஞான சீலராய்ச்
சனனமறு முத்தியென்னுந்
திருவாழ்வு கொண்டிலக வருள்பொழிதி யருள்பொழிதி
தெய்வநீ வாழி! வாழி!!
தென்மதுரை வாழ்பெரிய சின்மய சொரூபபர
தேவிமீ ஞட்சியுமையே. 30

☆

குறிப்பு.

(எண் : கவியைக் குறிக்கும்.)

1. அடைப்பை — வெற்றிலைப்பை; சின்மயம் — ஞானமயம்; 2. கோப்பெருந்தேவி — பட்டத்து ராணி; குளம் — நெற்றி; விது — சந்திரன்; சே—காளை; 3. முந்து — முற்காலத்தில்; செந்திரவியக் குன்றம் — மேருகிரி; 4. மிடியர் — வறியோர்; சுருதி—வேதங்கள்; 5. உள்கவிலை—நினைக்கவில்லை; வள்ளம்—கிண்ணம்;

6. பரிபாகம்-சஞ்சிதத்தினின்றும் மனிதப்பிறவிக்கு ஏதுவாய்ப் பக்குவப்பட்ட கர்மம்; தலகோடி—அண்டகோடி; தபனன்—சூரியன் 7. ஆறலைக்கும் — வழிப்பறிசெய்யும்; வம்பு — வாசனை; அளகம்— கூந்தல்; அளவாத—கலவாத; 8. தரளம்—முத்து; குந்தளம்—கூந்தல் மேனை — இமயாசலன் மனைவி; பொன்மாலை — காஞ்சனமாலை (மலையத்துவசன் மனைவி); 9. நிறீஇ—நிறுத்தி, களபம்—கலவைச் சாந்து; அள்ளல் — சேறு; நளினம் — தாமரை; 10. கண்மணி — உருத்ராட்சமணி; மருமம் — மார்பு; வாரணம் — (பாற்) கடல்; கிரீவம் — கழுத்து.

11. தருவாய் — (கற்பக) மரத்தின் (நிழலின்) கண்; மித்தை— பொய்; பவம்—பிறவி; 12. இந்தனம்—விறகு; அதனிலே — அந்த மாட வீதியிலே; செந்தனமகாசலம்—மேருகிரி; நம்பனை — சிவபெருமானை; செம்பாதி — சரிபாதி; 13. புணை — மரக்கலம்; கவிராச பண்டிதன் — வேம்பத்தூரிலிருந்த இரண்டாயிரத்தெட்டு அந்தணர் குடும்பங்களுள் ஒரு குடும்பத்தில் பிறந்தவர், வீரசோழம் என்னும் ஊரில் வசித்தவர், அம்பிகையின் திருவருள் பெற்ற பெரியவர், சௌந்தரியலகரியைத் தமிழிற் பாடியவர், ஞானவாசிட்டத்தைத் தமிழிற் பாடிய வீரை மாதவப்பட்டர் ஆளவந்தார் முனிவருக்குத் தகப்பனார்; சுதை—மகள்; ஆவணம்—கடைவீதி; மணிசேர்பொனாற் சமை கடகம்—இரத்தினங்கள் பதித்துத் தங்கத்தால் அமைக்கப் பட்ட காப்பு; 14. கமர்—நிலப்பிளப்பு; தமரம்—முழக்கம்; பளிதம்— கர்ப்பூரம்; குழுவு — கூடுகின்ற; ஒன்பான் —ஒன்பதாவது; கவி — (தொடுக்குங் கடவுட் பழம்பாடல் என்னும்) செய்யுள்; 15. எழுத்து ஓர் அஞ்சால் இயன்ற பதிகம்—பஞ்சாட்சரப் பதிகம்; மஞ்சு—மேகம்.

16. ரவிகுலம்—சூரியகுலம்; முனியொருவன்—வசிட்டமுனிவர்; நூல்— (ஞானவாசிட்ட) நூல்; தந்து—நிர்ணயித்து; இந்துளாடவி—

கடம்பவனம்; 17. இம்மணில்–இப் பூமியில்; திலதம் அணி–பொட்டு அணிகின்ற; "இளந்திங்கள் முன்பக்கம், மாணிக்கமாஞ் செம்மணி யிழைத்தென, நுதலிடை சிந்தூர திலதம் அணி பாண்டிமணியே" எனக் கூட்டுக; 18. வேலை–கடல்; கொடுமுடி–சிகரம்; குரவை–கடல்; வழுதி–(உக்கிரகுமார) பாண்டியன்; 19. அஞ்சும்–பயப் படத்தக்க; சிஞ்சுமாரம்–முதலை; செஞ்சவே – செவ்வையாகவே; 20. மறையவன் – அம்பிகையின் திருவருள்பெற்ற திருக்கடவூர் அபிராமபட்டர்; பூரணை – பௌர்ணமி; வேட்ட–மணந்த.

21. உற்கை–நட்சத்திரம்; இனன்–சூரியன்; நெற்கிடை–நெல் லளவு; எட்டுணை–எள்ளளவு; 22. நாவலோ எனும் முழக்கம்–போர்குவித்தல் முதலிய செயல்களில் மருதநிலத்து மக்கள் நாவலோ நாவலோ என்னும் முழக்கத்தைச் செய்வர்; இப்பிரயோ கத்தை முத்தொள்ளாயிரம், ஏரெழுபது, சேக்கிழார் பிள்ளைத் தமிழ் முதலிய நூல்களிற் காண்க. 23 கவலாது–கவலைப்படாது; பகழி–அம்பு; 24. காரிகை–கட்டளைக்கலித்துறை; கோவை நூல்–திருக்கோவையார்; 25. முற்றறிவு – சர்வக்ஞத்துவம்; மதிமலி யெனும் பா–மதிமலிபுரிசை மாடக்கூடல் எனுந் திருவாலவாயுடை யார் திருமுகப்பாசுரம்; இப்பாடலை 11-ந் திருமுறையிற் காண்க.

26. கல்லோலம் – அலை; ஆம்பல் – மூங்கில்; 27. புகார்க் கோமகன்–பட்டினத்து சுவாமிகள்; நூறுதுறை கொண்டொளிர் அகப்பொருட் கல்லாடம் – திருக்கோவையாருட் கண்ட நானூறு துறைகளில் பல்வேறிடங்களினின்றும் எடுத்துத் தொகுத்த நூறு துறைகளைக் கொண்டு விளங்கும் அகப்பொருள் இலக்கியமாகிய கல்லாடம்; தேறுதுறை-கற்றுத்தெளியத்தக்க துறைகள்; அன்பினைந் திணை–இஃது இறையனார் அகப்பொருள் முதற் சூத்திரத் தலைப்பு; எடுத்து–ஆரம்பித்து; 'அன்பினைந்திணை என்றெடுத்து தேறுதுறை அகச்செய்யுள் செய்தானை மருவும் உமையே' என்று கூட்டுக. 28. உதகம்–தண்ணீர் (ஆனந்தபாஷ்பம்); பழி–(விருத்திராசுரனைக் கொன்ற) பாபம்; 29. எந்தாய்–எமது தாயே; பந்தாடவி–பந்த மாகிய காடு; திசைவென்றி–திக்குவிஜயம்; இச்செய்யுளில் பத்துப் பாட்டு முதலியவை தொனிப் பொருளாய் வந்திருத்தல் காண்க. 30. மரு வாழ்வு கொண்ட–வாசனை குடிகொண்டுள்ள; ஆனமுது–பசுவின் பால்; தருவாழ்வு கொண்டவன்–இந்திரன். ★

கருணாநிதி அச்சகம், விஜயபுரம். போன் 22

